**கோவில்பட்டி நகராட்சி நகர்மன்ற**

அவசரக்**கூட்டம்**

## அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் கார்த்திகை திங்கள்-21, நாள்:- 07.12.2023ம் தேதி வியாழன் கிழமை காலை 11.00 மணியளவில் நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்ற அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகர்மன்ற தலைவர்
கோவில்பட்டி நகராட்சி

# கோவில்பட்டி நகராட்சி நகர்மன்ற
## அவசரக்**கூட்டம்**

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் கார்த்திகை திங்கள்-21, நாள்:- 07.12.2023ம் தேதி வியாழன் கிழமை காலை 11.00 மணியளவில் நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்டம்.

முன்னலை:-திரு.கா.கருணாநிதி
நகர்மன்ற தலைவர்

பொருள்எண்: 1

இந்நகராட்சிக்குட்பட்ட தினசரி சந்தையை இடித்துவிட்டு KNMT திட்டம் 2022-2023 ன் கீழ் புதியதாக கட்டும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி பணிகள் நடைபெறுவதையொட்டி கட்டுமான பணிகளுக்கு இடையூறாக உள்ள தாழ்வழுத்த மின்கம்பங்களை அகற்றிட கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் தினசரி சந்தையில் உள்ள மின்இணைப்பு மற்றும் மின்கம்பங்களை நிரந்தர மின்துண்டிப்பு செய்வதற்கான கட்டணத் தொகை ரூ.1,96,220/- யை செலுத்திட இளமின் பொறியாளர் அவர்களின் கடித எண் இ.மி.பொ/வி/நகர்/கி/கோ.பட்டி/கோ.கட்டு/அ.எண்.223, நாள் 10.11.2023ன்படி கேட்பு வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்கண்ட பணிக்கான கட்டணத் தொகை ரூ.1,96,220/- யை செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-693

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்எண்: 2

கோவில்பட்டி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் SBM (U) 2.0 2023-2024-ன் கீழ் Supply, Delivery of Cesspool tanker - 6000 litre capacity கொண்ட வாகனம் வாங்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.9192/2022/SBM–1 நாள்.21.08.2023-ன் கீழ் மதிப்பீட்டுத் தொகை ரூ.86.51/- இலட்சத்திற்கு பணி மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கண்ட பணிக்கு 06.10.2023 அன்று Online மூலமாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. ABT Industries Limited, Coimbatore நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தகுதியற்றதாக உள்ளது. அதன்படி, பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரம் கீழ்க்கண்டவாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | ASR Body Works, Madurai | மதிப்பீட்டைவிட (-) | மதிப்பீட்டு விலை விகிதம் |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டு விலை விகிதம் வழங்கியுள்ள M/s.ASR Body Works, Madurai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மேற்கண்ட பணியினை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மத்திய அரசு, மாநிலஅரசு மற்றும் நகராட்சி நிதியின் கீழ் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3433/2023/இ1

தீர்மான எண்:-694

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்எண்: 3

கோவில்பட்டி நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் விபரங்களை ஆயுத பூஜையை முன்னிட்டு வெளிவரும் தொழில்மலரில் அரசு விளம்பரங்கள் வெளியிடுவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி அவர்களின் கடிதம் ந.க.எண்.128/செ.ம.தொ.அ/2023 நாள்:14.08.2023ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியிலுள்ள திட்டப்பணிகள் விளம்பரம் செய்தமைக்கு பட்டியல் தொகை கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

1. தினமலர் .. ரூ.16,800/-
2. The Daily Thanthi .. ரூ.31,584/-
3. Kal Publication (P) Ltd .. ரூ.32,760/-
4. Express Publication(Madurai) Ltd., .. ரூ.9,975/-
5. Malar Publications Limited .. ரூ.14,000/-
6. Kal Publications (P) Limited .. ரூ.9,800.70/-

மேற்கண்ட பத்திரிக்கை நிறுவனங்களுக்கு பட்டியல் தொகை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-695

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்எண்: 4

கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு 1 முதல் 36 வரையிலான வார்டுகளில் உள்ள அனைத்து தெருவிளக்குகளும் தனியார் மூலம் இயக்குதலும் (ம) பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநரக முதன்மை பொறியாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.29045/2019/D02 நாள்.30.07.2020ன்படி நிர்வாக அனுமதி வழங்கியதின்படியும் இந்நகர்மன்ற தீர்மான எண்.4366, நாள்.30.09.2021-ன்படி 2021-2022 மற்றும் 2022-2023ம் ஆண்டிற்கு பணிகள் மேற்கொள்ள ந.க.எண்.1255/2020/இ1, நாள் 26.11.2021 மற்றும் இதே எண் கொண்ட நாள்:12.09.2022ன்படி வேலை உத்திரவு ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி அவர்களுக்கு வழங்கப்பட்டு கடந்த இரண்டு வருட காலமாக தெருவிளக்கு பணிகள் மேற்கொண்டு வருகிறார்கள். தற்போது மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வேலை உத்திரவு பணி காலம் கடந்த 11.09.2023ம் தேதியுடன் முடிவடைந்துவிட்டது. தற்போது நகரிலுள்ள அனைத்து தெருவிளக்குகளும் LED விளக்குகளாக மாற்றும் பணிகள் குமரன் இண்டஸ்ட்ரீஸ், சென்னை நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி LED விளக்குகள் மற்றும் பணிகள் நகர் முழுவதும் செய்து முடிக்க உத்தேச காலம் மூன்று முதல் நான்கு மாதங்கள் ஆகலாம். எனவே, மேற்கண்ட காலங்களில் நகரில் பொதுமக்களின் தெருவிளக்கு பயன்பாடுகள் அவசியம் கருதி தற்போது தெருவிளக்கு மேற்கொண்டு வரும் ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி அவர்களுக்கு அன்னார் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தின் அடிப்படையில் 12.09.2023 முதல் நான்கு மாத காலங்கள் மட்டும் உத்தேச செலவினம் தொகை ரூ22.00/- இலட்சம் மதிப்பீட்டில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்குரிய செலவினத் தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

தீர்மான எண்:-696

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்எண்: 5

கோவில்பட்டி நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2023-2024-ம் நிதியாண்டின் கீழ் வார்டு எண்.28 வீரவாஞ்சிநகரில் புதியதாக அங்கன்வாடி மையம் கட்டும் பணிக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ2/5863/2023 நாள்.03.10.2023ன் படி நிர்வாக

அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கண்ட பணிக்கு Online மூலமாக 26.10.2023 அன்று கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.

| | | |
|---|---|---|
| 1) S.சிவசுப்பிரமணியன் | .. | மதிப்பீட்டைவிட (--) 0.03% குறைவு |
| 2) V.கிருஷ்ணமூர்த்தி | .. | மதிப்பீட்டைவிட (--) 0.00% குறைவு |

வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--) 0.03% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு. S.சிவசுப்பிரமணியன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2023-2024-ன் கீழ் பணி செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3711/2023/இ1

தீர்மான எண்:-697

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்எண்: 6

கோவில்பட்டி நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2023-2024-ம் நிதியாண்டின் கீழ் வார்டு எண்.29 வீரவாஞ்சிநகரில் புதியதாக அங்கன்வாடி மையம் கட்டும் பணிக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ2/5863/2023 நாள்.03.10.2023ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கண்ட பணிக்கு Online மூலமாக 26.10.2023 அன்று கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.

| | | |
|---|---|---|
| 1) S.சிவசுப்பிரமணியன் | .. | மதிப்பீட்டைவிட (--) 0.02% குறைவு |
| 2) V.கிருஷ்ணமூர்த்தி | .. | மதிப்பீட்டைவிட (--) 0.00% குறைவு |

வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--) 0.02% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.S.சிவசுப்பிரமணியன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2023-2024-ன் கீழ் பணி செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3711/2023/இ1
தீர்மான எண்:-698
தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்எண்: 7

கோவில்பட்டி நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2023-2024-ம் நிதியாண்டின் கீழ் சங்கரலிங்கபுரம் மேற்கு மெயின்சாலையில் புதியதாக அங்கன்வாடி மையம் கட்டும் பணிக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ2/5863/2023 நாள்.03.10.2023ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கண்ட பணிக்கு Online மூலமாக 26.10.2023 அன்று கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.

| | | |
|---|---|---|
| 1) V.கிருஷ்ணமூர்த்தி | .. | மதிப்பீட்டைவிட (--) 0.04% குறைவு |
| 2) H.முகமதுஇப்ராஹிம் | .. | மதிப்பீட்டைவிட (--) 0.01% குறைவு |

வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--)0.04% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு. V.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2023-2024-ன் கீழ் பணி செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3711/2023/இ1
தீர்மான எண்:-699
தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்எண்: 8

கோவில்பட்டி நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் (15th CFC) 2023-2024-ன் கீழ் Supply, Delivery and Erection of 2 Nos of Bailing Machine வாங்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.18277/2022/EA-2, நாள்:30.08.2023-ன் கீழ் மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00/-இலட்சத்திற்கு பணி மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கண்ட பணிக்கு 25.09.2023 அன்று Online மூலமாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Sri Sai

Industry, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தகுதியற்றதாக உள்ளது. அதன்படி, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரம் கீழ்க்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1) Health Care Technology, Chennai | .. | மதிப்பீட்டைவிட (--) 0.20% குறைவு |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--)0.20% குறைவாக வழங்கியுள்ள Health Care Technology, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மேற்கண்ட பணியினை 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2022-2023-ன் கீழ் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.**1678/2022/இ1

தீர்மான எண்:-700

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-**9**

இந்நகராட்சி அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் மராமத்து பணிகள் மற்றும் Patch work பணி செய்திடவும் மற்றும் நகரிலுள்ள அனைத்து வேகத்தடைகளிலும் வர்ணம் பூசும் பணிக்கு ரூ6.00/- இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களால் 30.06.2023ல் மன்ற எண் 570 நிர்வாக அனுமதி கூழங்கப்பட்டுள்ளது.மேற்படி பணிக்கு 20.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.

| | | |
|---|---|---|
| 1. K.ராஜா முகமது | -- | மதிப்பீட்டைவிட (--)0.01% குறைவு |
| 2. P.S.R. Construction | | மதிப்பீட்டைவிட (--)4.44% அதிகம் |

வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--)0.01% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.K.ராஜா முகமது அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-701

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-**10**

கோவில்பட்டி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (Urban 2.0)–ன் கீழ் சிதம்பராபுரம் உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை Bio Mining முறையில் அகற்றும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**19009/2022**/SBM-1 நாள்.**02.11.2023–**ன் படி பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கி கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

Amount in Crore

| Sl. No. | Region | Name of the ULB | Location of Dumpsite | Qty of Legacy Waste in MT as per AU | Cost of Project @550/MT | GoI Share | GoTN Share | ULB Share | | Total ULB Share | Total Sanctioned cost |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | Processing cost | Transport cost | | |
| 1. | Tirunelveli | Kovilpatti | Chidamparapuram Compost Yard | 22073 | 1.214 | 0.61 | 0.40 | 0.21 | 0.42 | 0.62 | 1.63 |

மேற்கண்ட பணியை மத்திய அரசு மானிய தொகை ரூ.0.61/– கோடி, மாநில அரசு மானிய தொகை ரூ.0.40/– மற்றும் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.0.62/– கோடி சேர்த்து மொத்தம் ரூ.1.63/– கோடி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் கீழ் செய்வதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:–

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1895/2022/இ1

தீர்மான எண்:-702

தீர்மானம்:- பொதுநிதியில் நிதி குறைவாக உள்ளதால் பய்யோ மைனிங் திட்டத்திற்கு முழு அரசு மானியத்துடன் நிர்வாக அனுமதி வழங்கிட கோரி மன்றம் தீர்மானிக்கப்படுகிறது.

.

பொருள் எண்:-11

இந்நகராட்சிக்குட்பட்ட கதிரேசன் கோவில் மெயின் சாலையில் (Union Club) அருகில் கடந்த வாரம் பெய்த கனமழை காரனமாக சாலையில் இருந்த பக்கவாட்டு சுவர் 10 மீட்டர் நீலம் அளவு இடிந்து விழுந்துள்ளது. மேற்படி சாலையின் பகுதியில் சுமார் 10 மீட்டர் பள்ளமாக உள்ளது. எனவே மேற்படி சாலையில் பொது மக்கள் மற்றம் வாகனங்கள் பாதுகாப்பு கருதி உடன் தடுப்பு சவர் (பக்கவாட்டு சுவர்) அமைக்கும் பணிக்கு ஆகும் செலவினத்தொகை ரூ.20.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிக்கு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-703

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-12

இந்கராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2800/2022/ஆ2 நாள்.11.09.2023ன் படி கோவில்பட்டி நகராட்சி பகுதிகளில் என் குப்பை, என்பொறுப்பு பிளாஸ்டிக் ஒழிப்பு, வீட்டுக்கொரு கழிவறை, டெங்கு காய்ச்சல் மழைநீர் சேகரிப்பு போன்ற விழிப்புணர்வு ஏற்படுத்தும் நாடகம், நடனம், பாடல்கள் பாடி பொதுமக்கள் மத்தியில் கலைநிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஸ்ரீமதி கலைக்குழு சென்னை, என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கிடவும், நிகழ்ச்சி நடத்துவதற்கு உத்தேச செலவினம் ரூ.15,000/-க்கும் மன்ற முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.3751/2023/எச்1

தீர்மான எண்:-704

தீர்மானம்:- அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-13

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள வாகனம் எண்.**TN96B5157, TN96B5193, TN96B5259,** மற்றும் **TN69R5277** ஆகிய டாடா ஏசி வண்டிகளில் உள்ள டயர்கள் தேய்மானம் ஆகியுள்ளதால் புதிய டயர்கள் வாங்குவதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. இதில் வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1. | RATHNA TYRE WORLD<br>392F/1, North Thittangulam, Ettayapuram Road, Kovilpatti – 628 501. | 28400 |
| 3. | JAYA TYRES<br>80, New Road, Kovilpatti – 628 501. | 29200 |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி குறிப்பிட்டுள்ள RATHNA TYRE WORLD, 392F/1, North Thittangulam, Ettayapuram Road, Kovilpatti – 628501.. விலைப்புள்ளியினை ஏற்று எட்டு புதிய டயர்கள் வாங்குவதற்கு அனுமதியும் இதற்கான செலவினத்தொகை ரூ.28,400/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4183/2023/எச்1

தீர்மான எண்:-705

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்:-14**

கோவில்பட்டி நகராட்சியில் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள கொசு ஒழிப்பு பணியாளர்கள் மூலம் கொசுப்புழுக்களை அழிக்கும் பணிக்கு 200 லிட்டர் அபேட் (Temephos Emulsifiable 50% EC), 200 லிட்டர் பைரத்திரம் (Pyrethrum 2% Extract) மற்றும் 50 லிட்டர் மாலத்தீன் (Technical Malathion) மருந்து தேவைப்படுவதால் தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேசன் லிமிடெட் மூலம் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ள Paramount Pesticides Limited Meerut நிறுவனத்தின் தமிழக விநியோக உரிமை பெற்ற தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ் திருச்சி - 8 சொசைட்டி மூலம் அபேட் 1 லிட்டர் ரூ. 693.50+18%GST, பைரத்திரம் 1 லிட்டர் ரூ.1008.00+18%GST மற்றும் மாலத்தீன் ரூ.916.00+18%GST, என்ற அனுமதிக்கப்பட்ட விலையில் வாங்கிட அனுமதியும் மற்றும் இதன் பொருட்டு உத்தேச செலவினம் ரூ.4.80 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1870/2023/எச்1

**தீர்மான எண்**:-706

**தீர்மானம்**:- **அனுமதிக்கப்பட்டது**.

**பொருள் எண்:-15**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் ஓட்டுநராகப் பணிபுரிந்த திரு.முருகையா த/பெ.அய்யலு என்பவர் 30.09.2023ல் சுயவிருப்ப ஓய்வில் சென்றுள்ளார். அன்னாருக்கு வழங்கப்பட வேண்டிய சிறப்பு சேமநலநிதி மற்றும் அரசு மானியத்தொகை ரூ.10,000/-ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.3902/2023/எச்1)

**தீர்மான எண்**:-707

**தீர்மானம்**:- **அனுமதிக்கப்பட்டது**.

**பொருள் எண்:-16**

கோவில்பட்டி நகராட்சியில் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள கொசு ஒழிப்பு பணியாளர்கள் மூலம் கொசுப்புழுக்களை அழிக்கும் பணிக்கு பிளீச்சிங் பவுடர் 2000 கிலோ தேவைப்படுவதால் சென்னை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் 10.11.2021ம் தேதிய ந.க.எண்.10608/2021/எச்2 உத்திரவில் ஒரு கிலோவிற்கு ரூ.40/- என நிர்ணயம் செய்துள்ளபடி அவசர அவசிய தேவையை முன்னிட்டு பொது சுகாதார நலன் கருதி பிரிவு 15ன் கீழ் விலைப்புள்ளி பெற்றதில் மூன்று விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | நிறுவனம் பெயர் | விலை விபரம் (1கிலோ) |
| --- | --- | --- |
| 1. | P S B எக்ஸ்போர்ட்ஸ்<br>11, ஆறுமுகம் நகர், கழுகுமலை, கோவில்பட்டி - 628552. | Rs.43+GST |
| 2. | ஸ்ரீசத்தியா டைஸ் மற்றும் கெமிக்கல்ஸ்<br>23, ஆசிரிபட்டி ரோடு, ஆண்டிப்பட்டி, தேனி - 628512 | Rs.50+GST |
| 3. | ABI இன்டஸ்ரீஸ்<br>7/191A சீவலப்பேரி, மெயின்ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி | Rs.40+GST |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ABI இன்டஸ்ரீஸ், 7/191A சீவலப்பேரி, மெயின்ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்றுக்கொள்ளவும் மற்றும் இதன் பொருட்டு உத்தேச செலவினத்தொகை ரூ.1.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4696/2023/எச்1

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்**:-708

**தீர்மானம்**:- **அனுமதிக்கப்பட்டது**.

**பொருள் எண்:-17**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் துப்புரவு அலுவலராக பணிபுரிந்த திரு.நாராயணன் த/பெ.சீனிவாசன் என்பவர் 31.10.2023ல் சுயவிருப்ப ஓய்வில் சென்றுள்ளார். அன்னாருக்கு வழங்கப்பட வேண்டிய சிறப்பு சேமநலநிதி மற்றும் அரசு மானியத்தொகை ரூ.10,000/-ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.3151/2023/எச்1)

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்**:-709

**தீர்மானம்**:- **அனுமதிக்கப்பட்டது**.

**பொருள் எண்:-18**

கோவில்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் மேற்கு பகுதியில் உள்ள கட்டண கழிப்பறை வசூல் செய்யும் உரிமத்திற்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 30.11.2023 அன்று கோரப்பட்டது. பொதுஏலம் கேட்க யாரும் முன்வரவில்லை. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திரு.N.இளங்கோவன்,<br>த/பெ.நடராஜன்,<br>பண்ணைப்பட்டி,<br>உசிலம்பட்டி போஸ்ட்,<br>மதுரை மாவட்டம். | 925000/- |
| 2. | திரு.J.நாகராஜா,<br>த/பெ.எம்.ஜெயராஜ்,<br>80A, வடக்குதெரு,<br>சிறைப்பாரை (P.O)<br>ஆண்டிபட்டி தாலுகா,<br>கடமலைக்குண்டு வழி<br>தேனிமாவட்டம். | 885000/- |

<u>**அலுவலக குறிப்பு**</u>:-

1. மேலும் ஏலம் மறறும் ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. பொதுஏலத்திற்கு கலந்துகொள்ள யாரும் முன்வரவில்லை. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் முன்வைப்புத் தொகையாக ரூ.600000/- செலுத்தப்பட்டுள்ளார்கள்.
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரு.925000/- மூன்று ஆண்டு சராசரி தொகையைவிட கூடுதலாக உள்ளதால் திரு.என்.இளங்கோ என்பவரின் உயர்ந்தபட்ச தொகையினை ஒப்புக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.9856/2014/அ3

தீர்மான எண்:-710

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-19

இந்நகராட்சிக்கு உட்பட்ட பசும்பொன் உ.முத்துராமலிங்கத்தேவர் தினசரி சந்தையை பொதுமக்களின் பாதுகாப்பு நலம் மற்றும் நகராட்சி நிர்வாக நலன் கருதி இடித்து அப்புறப்படுத்திவிட்டு, மீண்டும் அனைத்து வசதிகளுடன் கூடிய புதியதாக கட்டப்பட்டுள்ள தினசரி சந்தையில் தற்போது 97 கடைகள், கழிப்பறை வசதி, கேன்டீன் வசதி, ஓட்டுநர் ஓய்வு அறை, மற்றும் இருசக்கர வாகன காப்பகம், நான்கு சக்கர வாகன காப்பகம் அனைத்து பகுதிகளுக்கும் LED விளக்குகளுடன் கூடிய அதிநவீன வசதிகள் கொண்ட தினசரி சந்தை 6.87 இலட்சம் மதிப்பீட்டில் அரசாணை எண்.G.O.(4D)No.23, நாள்:01.12.2022ன்படி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட கட்டமைப்பு பணிகள் நிறைவுபெறும்

தருவாயில் உள்ளது. மேலும் நகராட்சி வருவாயினை கருத்தில் கொண்டு 2015-2016ஆம் ஆண்டு குத்தகை ஏல நிபந்தனைகளுக்கு உட்பட்டு முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி (Pre action) மூலம் கீழ்க்கண்ட விபரப்படி கடைகளையினை பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் அதற்கான விளம்பர செலவுகளுக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும், பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | கட்டிட விபரம் A-Block தரைதளகடைகள் | மொத்த கடைகளின் எண்ணிக்கை | ஒவ்வொரு கடைகளுக்கும் முன்வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | A-Block தரைதளகடைகள் 10x10 அளவில் | 49 கடைகள் | 10.00 இலட்சம் |
| | 20x10 அளவில் | 7 கடைகள் | 20.00 இலட்சம் |
| | 20x20 அளவில் | 1 கடை | 40.00 இலட்சம் |
| 2. | B-Block தரைதள கடைகள்<br>10x10 அளவில்<br>20x10 அளவில் | <br>38 கடைகள்<br>2 கடைகள் | <br>10.00 லட்சம்<br>20.00 லட்சம் |
| 3. | கேன்டீன் (Can teen) உணவகம் 34x29 | 1 எண்ணம் | 30.00 லட்சம் |
| 4. | மார்க்கெட் கட்டண கழிப்பிடம் | 1 எண்ணம் | 6.00 லட்சம் |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. குத்தகை ஏல நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
2. பசும்பொன் உ.முத்துராமலிங்கத்தேவர் தினசரி சந்தையில் பழைய கடை உரிமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர் பாக்கி மற்றும் கடை வாடகை பாக்கி நிலுவையில் உள்ளவர்கள் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கலந்துகொள்ள அனுமதி வழங்க இயலாது
3. நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கலந்துகொள்ள அனுமதி வழங்க இயலாது என மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.4949/2023/அ3)

தீர்மான எண்:-711

தீர்மானம்:-

| வ. எண். | கட்டிட விபரம் தரைதளகடைகள் | கட்டிட விபரம் A-Block தரைதளகடைகள் | மொத்த கடைகளின் எண்ணிக்கை | ஒவ்வொரு கடைகளுக்கும் முன்வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | A-Block தரைதளகடைகள் | 10x10 அளவில் | 49 கடைகள் | ரூ8.00 இலட்சம் |
| | | 20x10 அளவில் | 7 கடைகள் | ரூ16.00 இலட்சம் |
| | | 20x20 அளவில் | 1 கடை | ரூ32.00 இலட்சம் |
| 2. | B-Block தரைதள கடைகள் | 10x10 அளவில் | 38 கடைகள் | ரூ08.00 இலட்சம் |
| | | 20x10 அளவில் | 2 கடைகள் | ரூ16.00 லட்சம் |
| 3. | கேன்டீன் (Can teen) உணவகம் | 34x29 | 1 எண்ணம் | ரூ25.00 லட்சம் |
| 4. | மார்க்கெட் கட்டண கழிப்பிடம் | - | 1 எண்ணம் | 6.00 லட்சம் |

மேற்படி கடைகளுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட வைப்புத் தொகையை குறைத்து அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது..

.

பொருள்எண்:- 20

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28, வீரவாஞ்சிநகர் பகுதியில் உள்ள பழைய OHT நிலையத்தில் உள்ள சுற்றுச்சுவரின் ஒரு பகுதி சேதமடைந்து இடியும் தருவாயில் உள்ளது. எனவே, மேற்கண்ட பகுதியில் உள்ள சுற்றுச்சுவரின் பழுதுகள் சரி செய்யும் பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் பணியினை செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-712

தீர்மானம்:- அனுமதிக்கப்பட்டது.

பொருள்எண்:-21

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20ல் புதியதாக கட்டப்பட்டுள்ள நகர்நல மையத்திற்கு கூடுதலாக Colour Washing, Presed files, பேவர் பிளாக் மற்றும் பிளம்பிங் பணிகள் செய்யும் பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.14.50/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-713

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்எண்:-22

கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18ல்அண்ணாநகர் மெயின் சாலை குறுக்குத் தெருவில் அண்ணாநகர் பிரதான சாலையில் உள்ள சிறுபாலங்கள் பழுதடைந்து பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறாக இருந்ததை அகற்றிவிட்டு புதிய சிறுபாலங்கள் அமைத்திட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்.224/30.08.2022ன்படி ரூ.1.65இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S.S.அன்வர்பாட்சா ஒப்பந்ததாரருக்கு நகர்மன்ற தீர்மான எண்.539/30.06.2023ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டு, வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

தற்சமயம் பழைய சிறுபாலம் உடைகப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளது. சிறுபாலம் அமைந்துள்ள இடஅமைப்பு, மற்றும் மண் அமைப்பின்படி (Loose Soil) பக்கச் சுவர்கள் உயரம் கூடுதலாக மற்றும் சிறுபாலத்தினை தொடர்ந்து அமைந்துள்ள வடிகால்களை சீரமைக்க வேண்டியுள்ளது. ஆகையால் திருத்திய மதிப்பீட்டின்படி ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1) கூடுதலாக செலவின தொகை ரூ.85,000/- வரை மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியினை பொதுநிதியில் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3) திருத்திய மதிப்பீட்டின்படி ஏற்கனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு அதே விலை விகிதத்தில் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
4) பணியின் அவசர, அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-714

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்எண்:-23

கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.36ல் சுப்பிரமணியாபுரம் 4வது மற்றும் 5-வது தெருவில் உள்ள சிறுபாலம் அமைத்திட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நகர்மன்ற தீர்மான எண்.519/30.06.2023ன்படி ரூ.0.85 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S.S.அன்வர் பாட்சா ஒப்பந்ததாரருக்கு நகர்மன்ற தீர்மான எண்.538/30.06.2023ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டு, வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

தற்சமயம் பழைய சிறுபாலம் உடைகப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளது. சிறுபாலம் அமைந்துள்ள இட அமைப்பு, மற்றும் மண் அமைப்பின்படி (Loose Soil) பக்கச் சுவர்களின் உயரம் கூடுதலாகவும் சிறுபாலத்தின் அகலம் அதிகப்படுத்தப்பட்டு அமைக்க வேண்டியுள்ளது. ஆகையால் திருத்திய மதிப்பீட்டின்படி ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.25/- இலட்சத்திற்கு (0.85ல் இருந்து கூடுதலாக ரூ40,000/-) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இப்பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3) திருத்திய மதிப்பீட்டின்படி ஏற்கனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு அதே விலை விகிதத்தில் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
4) பணியின் அவசர, அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-715

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்எண்:-24

கோவில்பட்டி நகராட்சி பகுதியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்கள் நடத்த நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 21335/2021 எம்2 நாள் 24.11.2023 மூலமும் .மாவட்ட ஆட்சித்தலைவர் தூத்துக்குடி மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.G1/1505394/2023நாள்.15.11.2023. வாயிலாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி பகுதியில் 11.12.2023 முதல் **29.12.2023** வரை காலை 10.00 முதல் கீழ் கண்டவாறு நடைபெறவுள்ளது. மேற்படி முகாம்மில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சேவைகள் 1) சொத்துவரி காலியிட வரிவிதிப்பு/தொழில்வரி விதிப்பு, 2) சொத்துவரி பெயர்மாற்றம், 3) குடிநீர்

பாதாள சாக்கடை இணைப்பு, 4) வர்த்தக உரிமம் 5) பிறப்பு இறப்பு சான்று வழங்கல் திருத்தங்கள், 6) கட்டிட அனுமதி, 7) தெருவோர வியாபாரிகள் நலத்திட்டம் PMSvaNidhi போன்ற திட்டங்களில் விண்ணப்பங்கள் பெறவும், மேலும், கூடுதலாக 10-துறையின் சேவைகளுக்கான விண்ணப்பங்கள் பெற உள்ளது. அது சமயம் முகாம் நடைபெற உள்ள இடத்தில் சாய்தள வசதி, கணினி பயன்படுத்துவதற்கான மேஜை வசதி மற்றும் கணினி பயன்பாட்டிற்கான மின்சார வசதி (UPS), தடையில்லா இணையதள சேவை ஏற்படுத்தி தருதல், வார்டு பகுதி பொதுமக்கள் விண்ணப்பங்கள் தர இருப்பதால், அவர்களுக்கான குடிநீர் வசதி மற்றும் கழிப்பறை வசதி ஆகியன ஏற்படுத்தி தருதல், மேலும், இந்த முகாமில் இதர துறைகளான மின்சார வாரியம், வருவாய் பேரிடர் துறை, வீட்டு வசதி துறை, உள்துறை(காவல்) மதுவிலக்கு(ம) ஆயத்தீர்வு துறை, மாற்றுத்திறனாளிகள் துறை, சமூக நலன் (ம) உரிமை துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை MSME (DIC) ஆகிய துறைகள் பங்கேற்ப உள்ளதால், அந்தந்த துறைக்களுக்கென தனித்தனி இடவசதிகள் ஏற்படுத்தி தருதல் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோர்களுக்கு உணவு, குடிநீர் ஆகியன ஏற்படுத்தி தருதல், மேலும் சம்மந்தப்பட்ட வார்டுகளிலும் இந்த நிகழ்வு குறித்து நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர்,வார்டுகளுக்கான நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் அறிந்திடும் வகையில் விளம்பரப்படுத்துதல்போன்ற அனைத்து நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாலும்

மேலும், இம்முகாம் நடைபெறும் பொழுது மாவட்ட ஆட்சியர்,நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருநெல்வேலி ஆகியோர்கள் உட்பட உயர் அலுவலர்கள் அனைவரும் வர இருப்பதால்,மேற்படி முகாம் நடைபெறும் இடத்தினை மிகவும் தூய்மையாகவும், முகாமின்போது பொது மக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தர ஆகும் உத்தேச செலவீனத்தொகை ரூ15.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு:-</u>

செலவீனத்தை பொது நிதியிலிருந்து செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-716

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-25

இந்நகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சிபெட்டி உரிமத்திற்கு 25.10.2023 அன்று பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளியில்

இரண்டு பேர் கலந்து கொண்ட விபரம் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | ஏலத்தொகை / ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.டி.கணேசன் ராஜன்<br>த/பெ. தியாகராஜன்<br>ராஜீவ்நகர்<br>6வதுதெரு | ரூ.30500/- |
| 2. | திரு.எஸ்.மதன்ராஜ்<br>த/பெ. சண்முகராஜ்<br>பங்களாத்தெரு | ரூ.33000/- |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

(அ) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை செலுத்தப்படவில்லை. மேலும் பொதுஏலத்தில் யாரும் கலந்துகொள்ளப்படவில்லை. மேலும் மேற்படி ஆண்டு குத்தகை ஏலம் போக சுமார் ஒரு வருடங்களுக்கு மேல் உள்ளது. எனவே தற்போது ஒபபந்தப்புள்ளி உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.33000/-ஐ ஏற்றுக்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ஆ) சுமார் 8 ஆண்டுகள் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்துகொள்ள முன்வரவில்லை. மேலும் தற்போது மட்டும் ஏலம் வரப்பட்டது என்ற விபரம் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.9856/2014/அ3)

தீர்மான எண்:-717

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்:-26**

கோவில்பட்டி நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து வந்த திரு.பூபதி/சுப்பையா என்பவர் தொடர்ந்த வழக்கு எண்.Crl.O.P.(MD)No.12178/2021 என்ற வழக்கிற்கு (Legal Opinion) சட்ட கருத்துரு வழங்கியதற்காக வழக்கு கட்டணம் ரூ.5500/- ஐ வழக்கறிஞர் திரு.R.ராதாகிருஷ்ணன் கோவில்பட்டி என்பவருக்கு வழங்கலாம் மன்றப்பொருள் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2647/2022/எச்1

தீர்மான எண்:-718

தீர்மானம்:- அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்:-27**

கோவில்பட்டி நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2022-2023ன் கீழ் Tipper Lorry 2 எண்ணம் வாங்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18274/2022/EA-2, நாள்:30.08.2023ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி, பணிக்கு 25.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய நிலையில் நிர்வாக காரணங்களினால் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 29.09.2023 அன்று கோரப்பட்ட நிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படாததால் பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேலும், பணிக்கு 19.10.2023 மற்றும் 10.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட நிலையில் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. மேற்கண்ட பணிக்கு மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை.

எனவே, இப்பணியினை துறையின் மூலம் செயல்படுத்திட Gem Rate அடிப்படையில் Chase வாங்குவதற்கும் உரிய Body கட்டிடம் ஒரு வாகனத்திற்கு ஆகும் கூடுதல் செலவினத் தொகை ரூ.5.00 இலட்சம் வீதம் மொத்தம் 10.00 இலட்சம் கூடுதல் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

மூன்றுமுறை ஒப்பந்தப்புள்ளி பெறப்படாத காரணத்தினாலும், Chase துறை மூலம் வாங்குவதற்கும் Body கட்டிட வாகனங்களுக்கு ஆகும் கூடுதல் செலவினத் தொகையை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-719

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்:-28**

கோவில்பட்டி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023-ன் கீழ் அரசாணை G.O.(4D) No.23 நாள்.01.12.2022-ன் படி பழுதடைந்த தினசரி சந்தையை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதியதாக அனைத்து வசதிகளுடன் கூடிய 251 எண்ணம் கடைகள் கட்டும் பணிக்கு ரூ.687.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளர் சென்னை அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு தற்போது புதிய கடைகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் கடந்த 27.09.2023 அன்று இவ்வலுவலகத்தில் நடைபெற்ற நகர்மன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள், நகராட்சி ஆணையாளர், சில்லறை மற்றும் மொத்த வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்ட கலந்தாய்வு கூட்டத்தின் முடிவில் மேற்படி புதியதாக கட்டப்பட்டு வரும் தினசரி சந்தையில் கூடுதலாக 62 கடைகள் கட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் இடம் நேராய்வு செய்யப்பட்டு கூடுதல் கடைகள் கட்டுவதற்கு போதிய இடவசதி இருப்பதால் அதற்கான கருத்துருவினை தயார் செய்து சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது. எனவே, கூடுதலாக 62 கடைகள் புதியதாக கட்டுவதற்கு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.190.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:-** இந்நகராட்சிக்கு தினசரி சந்தையில் புதியதாக 97 கடைகள் கட்டி முடிக்கப்படும் பொழுது அதன் மூலம் கூடுதலாக கிடைக்கப்பெறும் வருமானத்தை கருத்தில் கொண்டும் அதனை முன் ஏலமிட்டு அதில் கிடைக்கப்பெறும் தொகை மற்றும் நகராட்சி நிதியிலிருந்து

பெறப்படும் வருவாயின் மூலம் கூடுதலாக 62 கடைகள் கட்டுவதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.190.00 இலட்சத்திற்கு பொது நிதியின் கீழ் பணி செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-720

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் எண்:-29

கோவில்பட்டி நகராட்சியில் School Improvement Grant—Infrastructure Works 2023-2024-ன் கீழ் புதியதாக 5 எண்ணம் பள்ளி கட்டிடம் கட்டும் பணிக்கு ரூ.82.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.25741/2023/SS2 நாள்:26.10.2023-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, புதியதாக பள்ளி கட்டிடம் கட்டும் பணியினை துவக்கிடும்பொருட்டு பழுதடைந்த கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மேற்கண்ட பணியினை கல்விநிதியின் கீழ் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-721

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் எண்:-30

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, காந்திநகர் பாலன்தெருவில் உள்ள மின்மோட்டார் அறை பழுதடைந்து அபாயகரமான நிலையில் உள்ளதால் அதனை அகற்றிட 1-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட மின்மோட்டார் அறையினை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-722

தீர்மானம்:- அனுமதிக்கப்பட்டது.

## பொருள் எண்:-31

இந்நகராட்சிக்குட்பட்ட அலுவலக தரைதளத்தில் உள்ள அலுவலக கூட்டரங்கில் ஆய்வு கூட்டங்கள் நடத்துவதற்கு தேவையான நாற்காலிகள், மேடைகள், ஒலி ஒளி பெருக்கி சாதனங்கள், அலுமினிய தடுப்புகள் மற்றும் இதர வசதிகள் செய்திடும் பணிக்கு ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களால் 31.10.2023ல் மன்ற எண்.690 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 16.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1) | P.மாரிமுத்துப்பாண்டியன் | மதிப்பீட்டைவிட (-) | 0.02 % குறைவு |
| 2) | H.முகமது இப்ராஹிம் | மதிப்பீட்டைவிட (-) | 0.01 % குறைவு |

வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--) 0.02% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் திரு. P.மாரிமுத்துப்பாண்டியன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3433/2023/இ1

தீர்மான எண்:-723

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் எண்:-32

இந்நகராட்சிக்குட்பட்ட அலுவலக தரைதளத்தில் உள்ள அலுவலக கூட்டரங்கில் ஆய்வு கூட்டங்கள் நடத்துவதற்கு தேவையான குளிர்சாதனங்கள், Stabilizer, Projector, Screen புதியதாக வாங்கி பொருத்தும் பணிக்கு ரூ.4.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களால் 31.10.2023ல் மன்ற எண்.691 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 16.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1) | P.மாரிமுத்துப்பாண்டியன் | மதிப்பீட்டைவிட (-) | 0.03 % குறைவு |
| 2) | H.முகமது இப்ராஹிம் | மதிப்பீட்டைவிட (-) | 0.01 % குறைவு |

வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--) 0.03% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் திரு.P.மாரிமுத்துப்பாண்டியன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்:-724

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் எண்:-33

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 18 வரையுள்ள வார்டு பகுதிகளில் இரண்டாம் பைப்லைன் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட அனைத்து பகுதிகளிலும் ஆங்காங்கே பகிர்மான குழாய்கள் விடுபட்டு பிரிக்கப்படாமல் உள்ளது. எனவே, மேற்கண்ட பகுதிகளில் விடுபட்ட பகிர்மான குழாய்களை பதித்து அமைத்து, பொருத்தி குடிநீர் சோதனை செய்து சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியின் கீழ் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-725

தீர்மானம்:- அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-34

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் இரண்டாவது குடிநீர் திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பகிர்மான குழாய்கள் பதிக்கப்பட்டு மெயின் குழாய்களுடன் இணைப்பு செய்யப்படவில்லை. மேலும், ஆங்காங்கே உள்ள சிறுபாலங்கள் கடந்து (Culvert Crossing) இணைக்கப்படவில்லை. மேலும் வீட்டுக் குடிநீர் இணைப்புகள் விடுபட்டதை முழுமையாக சரிபார்த்து இணைப்பு செய்யப்படவில்லை. எனவே, மேற்கண்ட பணிகளை நல்ல முறையில் முடித்து சீரான குடிநீர் விநியோகம் செய்திடும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியின் கீழ் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-726

தீர்மானம்:- அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-35

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 மற்றும் 4-க்குட்பட்ட பகுதிகளில் (சங்கரலிங்கபுரம்) இரண்டாம் பைப்லைன் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில் ஆங்காங்கே பகிர்மான குழாய்கள் (மற்றும்) வீட்டிணைப்புகள் விடுபட்டும், தெருவிற்கும் மெயின் சாலைக்கும் ஓடை கடப்பு செய்து பொருத்தப்படாமலும் (Culvert Crossing and Interlinking) தேவையான வால்வுகள் பொருத்தப்படாமலும் உள்ளது. எனவே, மேற்கண்ட பகுதியில் விடுபட்ட பகிர்மான குழாய்களை அமைத்து பொருத்தி வீட்டிணைப்புகளை முறைப்படுத்தி பொருத்தி குடிநீர் சோதனை செய்து சீரான குடிநீர் விநியோகம் செய்திடும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.29.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியின் கீழ் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:-727

தீர்மானம்:- அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-36

கோவில்பட்டி நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2023-2024-ன் கீழ் மேற்கொள்ளும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி கடிதம் ந.க.எண்.31614/2023/தி2, நாள்.29.11.2023–ன் படி கீழ்க்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| | | | (ரூ. இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| வ. எண். | நகராட்சியின் பெயர் | பணி விவரம் | மதிப்பீட்டு தொகை | அரசு மானியம் | பொதுமக்கள் பங்களிப்பு |
| 1. | கோவில்பட்டி | கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட வீரவாஞ்சிநகர் (MCC அருகில்) பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல். | 40.00 | 26.67 | 13.33 |

மேற்கண்ட பணியினை அரசு மானியம் ரூ.26.67 இலட்சம் மற்றும் பொது மக்கள் பங்களிப்பு தொகை ரூ.13.33 இலட்சம் சேர்த்து மொத்தம் ரூ.40.00 இலட்சத்தின் கீழ் பணி செய்வதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மேற்கண்ட பணியினை நமக்கு நாமே திட்டத்தின் கீழ் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3186/2021/இ1

தீர்மான எண்:-728

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-37

கோவில்பட்டி நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் (Tied Grant) 2022-2023ன் கீழ் Tipper Lorry வாகனம் 2 எண்ணம் வாங்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18277/2022/EA-2 நாள்:30.08.2023-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி 10.11.2023 அன்று கோரப்பட்ட நிலையில் அதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட செய்திமலர் (District Edition) தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்திடுமாறு இந்நகராட்சியிலிருந்து கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி, செய்தி மக்கள் தொடர்புத்துறை, தூத்துக்குடி மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தமிழ்சுடர் (Tamil Publication) நாளிதழில் வெளியிடப்பட்டு அதற்கான கேட்பு ரூ.16,800/- வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள பட்டியல் தொகையை Tamil Publication நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்:-729

தீர்மானம்:- அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-38

கோவில்பட்டி நகராட்சியில் School Improvement Grant – Infrastructure Works – 2023-2024-ன் கீழ் Construction of 5 Nos of Class rooms at Bungalow Street Municipal Primary School பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.25741/2023/SS2 நாள்.26.10.2023-ன் கீழ் மதிப்பீட்டுத் தொகை ரூ.82.00/- இலட்சத்திற்கு பணி மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.4383/2023/ஆ1, நாள்.31.10.2023-ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கண்ட பணிக்கு 24.11.2023 அன்று Online மூலமாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் P.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தகுதியற்றதாக உள்ளது. அதன்படி, கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு.P.மாரிமுத்துப்பாண்டியன், கயத்தார் | .. மதிப்பீட்டைவிட (-) | 0.03% குறைவு |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டை விட (--) 0.03% குறைவாக வழங்கியுள்ள திரு.P.மாரிமுத்துப்பாண்டியன் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மேற்கண்ட பணியினை School Improvement Grant – Infrtastructure Works – 2023-2024-ன் கீழ் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3354/2022/இ1

தீர்மான எண்:-730

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்:-39

இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.1ல் இளையரசனேந்தல்ரோடு, மேம்பாலம் அருகில் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் டிரான்ஸ்பார்ம் அருகில் 10x8=80 சதுர அடியில் தரைவாடகை மதிப்பில் AC Sheet அவர் சொந்த செலவில் அமைத்து தருமாறு கேட்டு வந்துள்ள திரு.சு.ஆறுமுகம் என்பவரது விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

நகராட்சி வருவாயினை கருத்தில் கொண்டு தரைவாடகை மாதம் ரூ.800/- மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

தீர்மான எண்:-731

தீர்மானம்:-அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்)கா.கருணாநிதி,
நகர்மன்ற தலைவர்,
கோவில்பட்டி நகராட்சி

///உண்மை நகள்///

ஆணையாளர்
கோவில்பட்டி நகராட்சி